




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



FLY TOWARDS
DIGITAL INNOVATION

Services / சேவைகள்
✓ DIGITAL MARKETING
✓ WEB DEVELOPMENT
✓ SOFTWARE DEVELOPMENT

9080999823
7695883647

வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 301 24.04.2026 FRIDAY CHITHIRAI: 11 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 301 24.04.2026 வெள்ளிக்கிழமை சித்திரை : 11 விலை : ரூ.5/-


# 'தமிழ்நாடு வெல்லும்'

## வாக்கு செலுத்திய பின் முதல்வர் பேட்டி

**சென்னை: ஏப்.24–**

'தமிழ்நாடு வெல்லும்' என தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனது வாக்கினை செலுத்திய பின்னர் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சென்னை மயிலாப்பூர் தொகுதிக்கு உட்பட்ட எஸ்ஐஇடி கல்லூரியில் உள்ள வாக்குச்சாவடியில் குடும்பத்தினருடன் வருகை தந்து, வாக்கு செலுத்தினார் முதல்வர் ஸ்டாலின். அவருடன் அவரது மனைவி துர்கா ஸ்டாலின், மகனும் துணை முதல்வருமான உதயநிதி, மருமகள் கிருத்திகா, பேரன் இன்பநிதி ஆகியோர் தங்கள் வாக்குகளை செலுத்தினர்.



வாக்கு செலுத்திய பின்னர் முதல்வர் ஸ்டாலின் கூறியதாவது: "நான் என்னுடைய ஜனநாயகக் கடமையை ஆற்றியுள்ளேன். அதேபோல் தமிழகத்தின் வாக்காளர்கள் எல்லோரும் தவறாமல் தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும். தமிழ்நாடு வெல்லும்" என்றார்.

இந்தத் தேர்தல் தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கு இடையிலான தேர்தல் என தமிழகம் முழுவதும் முதல்வர் ஸ்டாலின் தனது பரப்புரையில் தெரிவித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

முதல்வர் எக்ஸ் பதிவு: "தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தவறாது வாக்களியுங்கள்! 2026 சட்டமன்றத் தேர்தலிலில் எனது வாக்கினைச் செலுத்திவிட்டேன். தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் அனைவரும் தவறாமல் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றிடுங்கள்.

இன்று நீங்கள் அளிக்கப் போவது வாக்கல்ல; தமிழ்நாட்டைக் காக்க நீங்கள் ஏந்தும் கேடயம்! உங்கள் வாக்குதான் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும்.

ஜனநாயகம் மதச்சார்பின்மை மாநில உரிமைகள் சமத்துவம் சமூக நீதி ஆகிய அரசியலமைப்பின் உயர்ந்த விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையில் உங்களின் வாக்கு அமையட்டும்!

தமிழ்நாடு வாக்களிக்கும்; தமிழ்நாடு வெல்லும்! வெல்வோம் ஒன்றாக!" என முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

"எல்லோரும் தங்கள் வாக்கினை செலுத்த வேண்டும். நான் கடந்த 25 ஆண்டுகளாக வாக்கு செலுத்தி வருகிறேன். எனது மகன் முதல் முறையாக தனது வாக்கினை செலுத்தி உள்ளார்" என துணை முதல்வர் உதயநிதியின் மனைவி கிருத்திகா தெரிவித்தார்.

## "ஆட்சி மாற்றம் தேவை என்பதில் மக்கள் உறுதியாக இருக்கிறார்கள்" வானதி சீனிவாசன்

கோவை, ஏப்.24-

"ஆட்சி மாற்றம் தேவை என்பதில் மக்கள் உறுதியாக இருக்கின்றனர்" என வானதி சீனிவாசன் தெரிவித்தார். கோவை, சிவானந்தா காலனி, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள காமராஜர் பள்ளியில் பாஜக தேசிய மகளிர் அணி தலைவரும், கோவை வடக்கு தொகுதி வேட்பாளருமான வானதி சீனிவாசன் வாக்களித்தார்.



இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் வானதி சீனிவாசன் பேசுகையில், "2026 சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு விறுவிறுப்பாக நடைபெறுகின்றது. பெண்களும், இளைஞர்களும் அதிகளவு வாக்களித்து வருகின்றனர். தேர்தல் பரபரப்புக்கு மத்தியிலும் திமுக இன்று காலை வரை தங்க நாணயம், வெள்ளி நாணயம் என டிராமா செய்கிறார். ஆட்சி மாற்றம் தேவை என்பதில் மக்கள் உறுதியாக இருக்கின்றனர். வாக்குறுதிகளை நிறைவேற்ற கோரி 6 மாத காலமாக போராடிக்கொண்டு இருப்பவர்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்.

கோவை தெற்கு தொகுதியில் தேர்தல் ஆணையம் கண்ணில் மண்ணை தூவி அராஜாகம் நடந்து கொண்டு இருக்கின்றது. தூங்கிக் கொண்டு இருப்பவர்களை எழுப்பி கோல்ட் காயின், சில்வர் காயின் என ஏமாற்றி வருகின்றனர். கோவை மாநகராட்சியில் இதே மாதிரி டிராமா செய்தார்கள். இப்போது குப்பை கூட எடுக்க வருவதில்லை. ஆட்சி மாற்றம் நிச்சயமாக வேண்டும். மக்கள் இதை செய்வார்கள். இளைஞர் சக்தியால் எதுவும் முடியும். இன்ஸ்ட்டா, சமூக ஊடகத்தில் இருப்பது அல்ல அரசியல். 2 மணி நேர சினிமா என்பது வேறு; அரசியல் வேறு. இன்ஸ்டா என்பது ஒரு டூல். முடிவெடுப்பதில் புத்திசாலித்தனம் வேண்டும். நிறைய இடங்களில் வாக்குப் பதிவு இயந்திரம் பழுதடைந்துள்ளது" என்று அவர் கூறினார்.

## "தேர்தலில் வாக்களிக்காமல் இருப்பது ஜனநாயக துரோகம்" வாக்களித்த பின் சீமான் கருத்து

சென்னை, ஏப்.24-

தேர்தலில் வாக்களிக்காமல் இருப்பது ஜனநாயக துரோகம் ஆகும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.



தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று காலை 7 மணிக்கு தொடங்கியது. சென்னை நீலாங்கரையில் தனது வாக்கினை சீமான் செலுத்தினார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியது:

"தேர்தலில் வாக்கு செலுத்தாதவர்களுக்கு என்ன பிரச்சினை என்றவொரு கேள்வி உள்ளது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மீது நம்பிக்கை இல்லையா, இந்த நாட்டின் ஜனநாயக அமைப்பு மீது நம்பிக்கை இல்லையா என்ற கேள்வி எழுகிறது. நூறு சதவீத வாக்கு பதிவாக வேண்டும் என தேர்தல் ஆணையம் சொல்லி வருகிறது. குண்டு வைப்பது, கொலை செய்வது, சொத்து சேர்த்து கணக்கு காட்டாமல் இருப்பது மட்டும் குற்றம் அல்ல. வாக்கு செலுத்தாமல் இருப்பதும் குற்றம்தான். அது ஜனநாயக துரோகம் தான். கற்றவர்கள் தான் மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். ஒரு வாக்கு செலுத்துவதில் என்ன மாற்றம் என நினைக்கிறார்கள். ஒவ்வொரு வாக்கிலும் இருந்துதான் அந்த மாற்றம் வரும். நாம் எல்லோரும் வாக்கு செலுத்துவது நமது பொறுப்பு, கடமை. அதை தவறாமல் செய்ய வேண்டும் என அன்பாக வேண்டுகிறேன்" என்றார்.

## தேர்தல் முடிவு எப்படி இருக்கும்? மதுரையில் மு.க.அழகிரி சூசக பதில்

மதுரை: ஏப்.24-

தேர்தல் முடிவு எப்படியிருக்கும் என்ற நிருபர்களின் கேள்விக்கு, "நான்தான் அன்றைக்கே சொல்லிவிட்டேனே, யார் வேண்டுமென்றாலும், எப்படி வேண்டுமென்றாலும் ஜெயிக்கலாம்'' என்று முன்னாள் மத்திய அமைச்சரும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் சகோதரருமான மு.க.அழகிரி புதிர்போல் பதில் அளித்தது கவனம் பெற்றுள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சரும், மறைந்த முதல்வர் கருணாநிதி மகனுமான மு.க.அழகிரி, இன்று டிவிஎஸ் நகரில் உள்ள டிவிஎஸ் பள்ளியில் வாக்களித்தார். அவருடன் அவரது மனைவி காந்தி வந்திருந்தார். வாக்களித்துவிட்டு வாக்குச்சாவடியை விட்டு வெளியே வந்த அழகிரியிடம் செய்தியாளர்கள், கேள்விகளை முன் வைத்தனர்.

வாக்களிப்பது எவ்வளவு முக்கியமான விஷயம் என்ற கேள்விக்கு, ''வாக்களித்த எல்லோரும் என் ஜனநாயக கடமையை நிறைவேற்றினேன் என்று சொல்லப்போகிறார்கள். நானும் அதைத்தான் சொல்கிறேன்.'' என்றார்.

தேர்தல் களம் எப்படி இருக்கிறது என்ற கேள்விக்கு, "தேர்தல் கொஞ்சம் சூடாக இருக்கிறது. வெளியே வெயிலாக, சூடாக இருக்கிறது,'' என்றார். எல்லோரும் அவரது இந்தப் பதிலுக்கு சிரித்தனர்.

தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள் என்ற கேள்விக்கு அவர், ''தெரியவில்லை, நான்தான் அன்றைக்கே சொல்லிவிட்டேனே, யார் வேண்டுமென்றாலும், எப்படி வேண்டுமென்றாலும் ஜெயிக்கலாம் என்று. ஒன்றும் புரியவில்லை. என்னுடைய ஜனநாயகக் கடமையை ஆற்றிவிட்டேன். அவ்வளவுதான்,'' என்றார்.

திமுகவில் தன் ஆதரவாளர்களை சேர்த்துக் கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், தன்னை இன்னும் சேர்த்துக் கொள்ளாததால் மு.க.அழகிரி வருத்தத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதை முக.அழகிரியின் மகள் கயல்விழி, சமீபத்தில் ஒரு பேட்டியில், மிக வெளிப்படையாகவே தெரிவித்தோடு "ராமனுக்கே 14 வருஷம்தான் வனவாசம், எங்க அப்பாவை ஓரங்கட்டி 15 வருஷம் ஆகிவிட்டது" என தன்னுடைய சித்தப்பா முதல்வர் மு.க.ஸ்டாலின், தன்னுடைய தந்தையை திமுகவில் சேர்த்துக் கொள்ளாதது பற்றி வருத்தமாகக் கூறியது குறிப்பிடத்தக்கது.

## "தமிழகத்தில் நல்லதொரு மாற்றம் வருமென்று முழுமையாக நம்புகிறேன்" : அண்ணாமலை

கோவை: ஏப்.24-

தமிழகத்தில் நல்லதொரு மாற்றம் வருமென்று முழுமையாக நம்புகிறேன் என பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கூறினார்.

பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கோவை பீளமேட்டில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் தனது வாக்கினை இன்று காலை செலுத்தினார். அதைத் தொடர்ந்து அண்ணாமலை செய்தியாளரிடம் கூறியதாவது: தமிழகத்தில் காலை முதல் எல்லோரும் தங்களது ஜனநாயக கடமையை சிறப்பான முறையில் செய்து வருகின்றனர். அனைத்து இடங்களில் உள்ள வாக்குச்சாவடிகளில் தமிழக மக்கள் வரிசையில் காத்திருந்த வாக்களித்து வருகின்றனர்.



5 கோடியே 65 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். 29 வயதிற்கு கீழே ஒரு கோடியே 30 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். முதல் முறை வாக்காளர்கள் கிட்டத்தட்ட 17 லட்சம் பேர் உள்ளனர். அனைவரும் நிச்சயம் தங்களது ஜனநாயக கடமை செய்ய வேண்டும் . அனைவரும் வாக்களிக்க வேண்டும். மதியம் வெயில் அதிகமாக இருந்தால் கூட குடையுடன் வந்து பெரியவர்கள் வாக்களிக்கலாம் வாக்குச்சாவடியில் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. வாக்களிக்காமல் யாரும் வீட்டில் இருந்து விட வேண்டாம்.

தமிழகத்தில் நல்ல ஒரு மாற்றம் வரும் என்று முழுமையாக நான் நம்புகின்றேன். மனசாட்சிப்படி சரியான முறையில் அனைவரும் ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும். 84 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என செய்திகள் கேள்விப்பட்டேன். தமிழ்நாடு எப்பொழுதும் அமைதியான மாநிலம். நாம் ஒரே கட்டமாக தான் தொடர்ந்து வாக்குப்பதிவு நடத்தி வருகிறோம். மக்கள் எப்போதும் அமைதியாக வந்து வாக்களித்து விட்டு சென்று விடுவார்கள் எதுவும் இருக்காது. அதேசமயம் கடந்த இரண்டு மூன்று நாட்களாக வாக்குக்கு பணம் கொடுத்தல், கரூரில் பார்த்தால் தங்கம் வெள்ளி பொருட்கள் கொடுத்தல், கோவையில் பணம் விநியோகித்தல் என வாக்குப்பதிவுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அதிகம் மீறி இன்று வாக்களிக்க வருபவர்கள் மனசாட்சிப்படி வாக்களிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

சென்னையில் இருந்து தென் தமிழகத்திற்கு செல்லக்கூடிய பேருந்து வசதிகள் குறைவாக இருக்கிறது. சிங்காநல்லூரில் இருந்து வெளியூர் செல்லும் பேருந்துகளும் குறைவாய் இருக்கிறது என்ற புகார் வந்தது. தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் இன்னும் சிறப்பாக செய்திருக்கலாமோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. பேருந்துகள் பொதுஅளவுக்கு இருக்கிறது என்று உறுதிப்படுத்தி இருக்க வேண்டும். கட்சி சார்ந்தவர்கள் பொதுவாக இருப்பவர்கள் இளைஞர்கள் கூட பேருந்து வசதி தொடர்பாக புகார் கூறுகின்றனர்.

அனைவரும் வாக்களிப்பதற்கு தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் ஆணையம் இன்னும் சிறப்பாக தன் பணியை செய்திருக்க வேண்டும் என்று என் தனிப்பட்ட கருத்து வீட்டுக்கு வீடு நடந்து சென்று ஒரு வாக்குக்கு ஐந்தாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். கரூரில் வாக்காளர்களுக்கு தங்க நாணயங்கள் கொடுக்கின்றனர். இவை அனைத்தும் ஒரே நாளில் வரவில்லை. முன்னரே கொண்டு வந்து எங்கோ ஒரு இடத்தில் பதுக்கி வைத்து இதை கொண்டு சென்று இருக்கின்றனர்.

சாதாரண பொதுமக்கள் பணம் எடுத்துச் செல்லும் பொழுது கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். பணம் பொருட்களை தேர்தல் ஆணையம் பிடித்துள்ளது என்று கூறினாலும் அதில் அரசியல் பிரமுகர்களின் பொருட்கள் எவ்வளவு. கோவையில் அதிமுக வேட்பாளர் ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடிய நிலை ஏற்பட்டது. வாக்காளர் வாக்குச்சாவடிக்கு வரும்பொழுது நேர்மையாக நியாயமாக மனசாட்சிப்படி வாக்களிப்பார்கள் என்று நம்புகிறேன்.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியின் காரணமாக வாக்கு சதவீதம் என்னை பொறுத்தவரை வழக்கமாய் இருப்பது விட இரண்டு பேரும் இரண்டு சேரும் உயரும். இரண்டரை சதவீதம் உயரும். அந்த இரண்டரை சதவீதத்திற்கு மேலே வரும் வாக்குப்பதிவு தான் அதிகமான வாக்குப்பதிவு சதவீதமாக நாம் கணக்கெடுத்துக்கொள்ள வேண்டும். எஸ்.ஐ.ஆர் பணிகள் அனைத்தும் நேர்மையான முறையில் நடந்தது. இந்த தேர்தல் வழக்கமான தேர்தல்களை தாண்டி அடுத்த கட்டத்திற்கு சென்று விட்டது.

வாக்குக்கு பணம் பொருட்கள் தைரியமாக கொடுக்கின்றனர். கோவை புறநகரில் ஒரு ஓட்டுக்கு ஐந்தாயிரம் பணம் கொடுக்கின்றனர். அதையும் தாண்டி நடைபெற்றுள்ளது. இது தேர்தல் ஆணையத்திற்கே ஒரு பாடமாக நான் பார்க்கிறேன். எனவே தேர்தலுக்கு மூன்று மாதத்திற்கு முன்ப தேர்தல் ஆணையம் கட்டுப்பாட்டில் எடுக்க வேண்டிய நிலை உள்ளது.

வங்கி பரிமாற்றங்கள், நிதி பரிமாற்றங்கள் போன்றவற்றை கண்காணிக்க வேண்டிய சூழல் உள்ளது. தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்னரே அரசியல்வாதிகள் பதுக்க வேண்டிய பணங்களை மதிக்கின்றனர் . இன்று காலை பார்க்கும் பொழுது பல இடங்களில் திமுக தனது சாஃப்ட் பிரச்சாரத்தை செய்கிறது.

வாக்குச்சாவடியில் இருந்து 100 மீட்டர் எல்லைக்குள் யாரும் எந்த பிரச்சாரத்திலும் ஈடுபடக்கூடாது. ஆனாலும் பல இடங்களில் திமுகவினர் சாஃப்ட் பிரசாரம் செய்கின்றனர். தேர்தல் ஆணையம் இதை கண்காணித்து தீவிரமாக பரிசளித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். திமுக செயலை நாங்கள் கண்டிக்கின்றோம்.

நான் பிரசாரத்தில் பேசியது உறுதியாக நடக்கும். நான் அரசியலுக்கு வந்த பிறகு வெள்ளை சட்டை, பிரவுன் பேண்ட் போடுவது வாடிக்கை. இதை ஜெகன் மோகன், ரெட்டி விஜய் போன்றவர்கள் போடுகின்றனர்.

இதற்கு வேறு எதற்க்கும் தொடர்பு இல்லை. இந்த பக்கம் சேர்க்க வேண்டாம். நான் ஒரே பக்கம் தான் இருக்கிறேன். சரியான பக்கம் நியாயமான பக்கம் மாறுகிறேன் . கண்டிப்பாக இந்த முறை தேர்தல் ஆணையம் இன்னும் சிறப்பாக செய்திருக்க வேண்டும் என்பது எனது கருத்து கடைசியாக இரண்டு மூன்று நாட்கள் விரும்பத்தகாத நிகழ்வுகளை நடத்தியுள்ளனர் குறிப்பாக திமுக நடத்தியுள்ளனர். அதை இன்று பேசி பிரயோஜனமில்லை. மக்கள் இதையெல்லாம் கணக்கில் வைத்துக் கண்டு வாக்களிப்புடன் விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# 30 பள்ளிக் குழந்தைகளைக் காப்பாற்ற விஷ பாம்புடன் போராடி உயிர்நீத்த தெரு நாய்

புவனேஸ்வர், ஏப்.24-

பள்ளிக் குழந்தைகளை காப்பாற்ற விஷ பாம்புடன் போராடி உயிர்நீத்த தெரு நாய்க்கு கிராம மக்கள் அஞ்சலி செலுத்தி அடக்கம் செய்தனர்.

தெரு நாய்கள் தொல்லை அதிகரித்து வருவதாக ஊடகங்களில் அடிக்கடி செய்தி வருகின்றன. தெரு நாய்களை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டால், விலங்கு நல ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இப்பிரச்சினை நாடு முழுவதும் உள்ளது.



இந்நிலையில் தெரு நாய் ஒன்று விஷ பாம்புடன் போராடி பள்ளிக் குழந்தைகளை காப்பாற்றிய சம்பவம் ஒடிசாவில் நடைபெற்றுள்ளது. அங்குள்ள மயூர்பன்ச் மாவட்டத்தில், திராகுலா என்ற கிராமம் உள்ளது. இங்குள்ள நர்சரி பள்ளியில் 30 குழந்தைகள் படிக்கின்றனர். இந்நிலையில் பள்ளி வளாகம் அருகே விஷ பாம்பு ஒன்று வந்தது. இதை பார்த்ததும் அந்த தெருவில் உள்ள காளி என்ற நாய் குரைத்து அதனுடன் சண்டையிட்டது. இதனால் அந்த பாம்பு சீற்றத்துடன் நாயை பலமுறை கொத்தியது. முகத்திலும், வாயிலும் பாம்பு கொத்தியதையும் பொருட்படுத்தாமல் காளி முழு மூச்சுடன் சண்டையிட்டு பாம்பை கடித்து கொன்றது.

ஆனால் பாம்பின் விஷம் உடலில் ஏறியதால், சிறிது நேரத்தில் காளி மயங்கி விழுந்து இறந்தது. இச்சம்பவம் திராகுலா கிராம மக்களை சோகத்தில் ஆழ்த்தியது. வீரத்துடன் போராடி தங்களின் குழந்தைகளை காப்பாற்றிய காளிக்கு கிராம மக்கள் வெள்ளைத் துணி போர்த்தி, மலர் மாலைகளால் அலங்கரித்து அஞ்சலி செலுத்தினர். இச்சம்பவம் சமூக ஊடகங்களில் வேகமாக பரவி வருகிறது.

# மணப்பாறை அருகே காவல் துறையை கண்டித்து பொது மக்கள் தேர்தலை புறக்கணித்து போராட்டம்

திருச்சி, ஏப்.24-

மணப்பாறை அருகே காவல்துறையை கண்டித்து பொதுமக்கள் வாக்களிக்க மறுத்து போராட்டம் நடத்திய சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது. திருச்சி மாவட்டம், மணப்பாறை தொகுதி வெள்ளையக்கோன்பட்டியில் அரசு தொடக்கப்பள்ளியில் வாக்குச்சாவடி எண் 225ல் வாக்குப்பதிவு நடைபெற்று வரும் நிலையில் வாக்குச்சாவடிக்கு 100 மீட்டருக்கு அப்பால் அரசியல் கட்சியினர் தங்கள் கட்சி சின்னத்திற்கு வாக்கு கேட்டு பிரச்சாரம் செய்து கொண்டிருந்ததாக



கூறப்படுகிறது. அப்போது அவ்வழியாக வந்த அதிரடிப்படை போலீஸார் அரசியல் கட்சி பிரமுகர்கள் சிலரை கலைந்து போகச் சொல்லி தாக்கியதாக கூறப்படுகிறது. திமுக நிர்வாகி சண்முகமூர்த்தி என்பவரை தாக்கிதோடு போலீஸார் அவரை வேனில் ஏற்றி அழைத்துச் சென்றுள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த வெள்ளையக்கோன்பட்டி பொதுமக்கள் வாக்களிப்பதை நிறுத்திவிட்டு வளநாடு கைகாட்டி புத்தாநத்தம் சாலையில் முட்கள் மற்றும் கட்டைகளை போட்டு தடுப்பு ஏற்படுத்தி சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.போலீஸார் அழைத்துச்சென்ற சண்முகமூர்த்தியை விடுவிக்க வேண்டும். பொதுமக்களை தாக்கிய போலீஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கூறி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மணப்பாறை டிஎஸ்பி காவியா, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் பாலகாமாட்சி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். பொதுமக்களின் மறியலால் சண்முகமூர்த்தி விடுவிக்கப்பட்ட நிலையிலும் பொதுமக்கள் மறியல் மற்றும் வாக்களிப்பு புறக்கணிப்பு போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர். பொதுமக்களின் மறியலால் 11.10 மணிமுதல் மதியம் 2.40 வரை வாக்குப்பதிவு நடைபெறவில்லை. இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மொத்தமுள்ள 1016 வாக்காளர்களில் இதுவரை 316 பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர். மறியலில் ஈடுபட்டுள்ளவர்களிடம் மணப்பாறை எம்எல்ஏ அப்துல் சமது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

# வாக்குச்சாவடிக்குள் 'செல்பி' எடுத்தால் சிறை தண்டனை: தேர்தல் ஆணையம் எச்சரிக்கை

சென்னை, ஏப்.24-

வாக்குச்சாவடிக்குள் புகைப்படம், செல்பி, வீடியோ எடுத்தால் 3 மாத சிறை தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது. வாக்குச்சாவடி மையத்தில் வாக்காளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த வழிகாட்டுதல்களை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்களிக்கும்போது படம்பிடிப்பது 1951ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 128ன்படி கடும் குற்றமாகும். எனவே, வாக்குச்சாவடிக்குள் செல்போன், கேமரா,




ஸ்மார்ட் வாட்ச் உள்ளிட்ட டிஜிட்டல் சாதனங்களை கொண்டு செல்லவும், பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. வாக்குச்சாவடிக்கு வெளியே வாக்காளர்களின் செல்போன்களை பாதுகாக்க தனியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதை மீறி, டிஜிட்டல் சாதனங்களை உள்ளே கொண்டு சென்று, வாக்குச்சாவடியில் புகைப்படம், செல்பி, வீடியோ எடுத்தால் 3 மாதம் வரை சிறைத் தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும். மின்னணு சாதனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.எதிர்காலத் தேர்தல்களில் வாக்களிக்க முடியாதபடி அவர்களை தகுதி நீக்கம் செய்யவும் தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது. வாக்களிப்பதன் ரகசியத்தைக் காப்பது முக்கியம் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரல் மை யுடன் செல்பி எடுக்க விரும்புவோர் வாக்குச்சாவடிக்கு வெளியே வந்து புகைப்படம் எடுத்துக்கொள்ளலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பாளையங்கோட்டையில் வாக்காளர்களைக் கவர்ந்த 'கலர் கோடு' வழித்தடம்!

பாளையங்கோட்டை, ஏப்.24-

பெருமாள்புரம் தொடக்கப் பள்ளி வளாகத்தில் 12 வாக்குச் சாவடிகள் ஒரே இடத்திலேயே அமைக்கப்பட்டிருந்தன. அவை வெவ்வேறு வண்ணங்களில் அமைக்கப் பட்டிருந்தது கவனம் ஈர்த்துள்ளது. தமிழக சட்டப்பேரவைக்கான வாக்குப்பதிவு விறுவிறுவென நடந்து வருகிறது. இந்நிலையில், சுவாரஸ்யமான சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. அந்த வகையில், பாளையங்கோட்டை பெருமாள் புரம் தொடக்கப் பள்ளி வளாகத்தில் 12 வாக்குச் சாவடிகள் ஒரே இடத்திலேயே அமைக்கப்பட்டிருந்தன.




ஒவ்வொரு வாக்குச் சாவடியும் வெவ்வேறு வண்ணங்களில் அமைக்கப்பட்டிருந்தது. அந்த வண்ணங்கள் பள்ளியின் வாயிலில் கோடுகளாக அமைக்கப் பட்டிருந்தன.வாக்காளர்கள் வாயிலின் முன்னே உள்ள தகவல் பலகையில் உள்ள வாக்குச்சாவடிகளின் எண்களைப் பார்த்து, அதில் உள்ள வண்ணங்களின் கோடுகளின் வழியே தொடர்ந்து சென்றால் வாக்காளர்களின் வாக்குகள் உள்ள வாக்குச் சாவடிக்கே கொண்டு செல்லும் வகையில் அமைக்கப் பட்டிருந்தது. இந்த கலர் கோடுகளை சுவாரஸ்யத்துடன் அனுபவித்து சென்றனர் வாக்காளர்கள்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 இல் தனது ஜனநாயக கடமையை தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில தலைவர் வெ.மகேந்திரகுமார் சென்னை ஆர்.கே.நகர் சீதக்காதி மெட்ரிகுலேஷன் பள்ளியில் தனது ஜனநாயக வாக்கு உரிமையை செலுத்தினர்.

# தந்தையின் உறுதுணையுடன் நிறைவேறிய மகனின் ஜனநாயக கடமை!

பாளையங் கோட்டை, ஏப்.24-

பாளையங் கோட்டையில் மனநல மாற்றுத் திறனாளி இளைஞர் ஒருவர் தனது தந்தையின் உறுதுணையுடன் முதல் வாக்குரிமையை செலுத்தி, ஜனநாயக கடமையை நிறைவேற்றியிருப்பது கவனம் ஈர்த்தது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது. மக்கள் ஆர்வத்துடன் வரிசையில் நின்று வாக்களித்து வருகின்றனர்.இந்நிலையில், பாளையங்கோட்டை இஞ்ஞாசியார் தொடக்கப் பள்ளியில் மனநல மாற்று திறனாளி இளைஞரான




24 வயது மாரிக்கண்ணன் தனது வாக்குரிமையை செலுத்திவிட்டு மகிழ்வுடன் அழியாத மை வைத்த விரலினை காண்பித்தார்.

மாரிக்கண்ணன் தனது முதல் வாக்குரிமையை செலுத்தினார். இவரது தந்தை நாராயணன் கூலி வேலை செய்கிறார். தனது மகனும் எல்லோரையும் போல இந்திய குடிமகனாக இருக்க வேண்டும் என்று அவருக்கு வாக்காளர் உரிமையைப் பெற்றுக் கொடுத்து, அவரை தனது கடமையாற்ற உறுதுணையாக இருந்திருக்கிறார். இதனை அவர் பெருமையுடன் பகிர்ந்து கொண்டார். வாக்களித்து விட்டு அவர் எல்லோருக்கும் தனது இன்முகத்துடன் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்தார்.




■ ஈரோடு கிழக்குத் தொகுதிக்கு உட்பட்ட ரயில்வே காலனி இரண்டு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பொதுமக்கள் ஆர்வத்துடன் தங்களது ஜனநாயக கடமையை ஆற்றினார்

# கடவுள் நம்பிக்கையில் தலையிட முடியாது

## சபரிமலை வழக்கில் வாதம்

புதுடெல்லி, ஏப்.24-

சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் வழிபட அனுமதித்த தீர்ப்புக்கு எதிரான மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது.

நேற்று நடைபெற்ற 7வது நாள் விசாரணையின்போது, தீர்ப்பை எதிர்க்கும் தரப்பை சேர்ந்த மூத்த வழக்கறிஞர் கோபால் சுப்ரமணியம் ஆஜராகி, "பக்தரின் நம்பிக்கை தனிப்பட்ட விவகாரம் என்பதால், பக்தருக்கும், படைத்தவருக்கும் இடையிலான விவகாரத்தில் நீதிமன்றங்கள் தலையிட முடியாது" என வாதிட்டார்.

# "திமுக தனிப் பெரும்பான்மை உடன் ஆட்சி அமைக்கும்" வாக்களித்த பின் வைகோ நம்பிக்கை

தென்காசி, ஏப்.24-

"மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி 200 தொகுதிகளில் வெற்றி பெறும். வாக்குகள் எண்ணி முடித்த பிறகுதான் தவெக வாங்கும் வாக்குகள் யாருக்கு பாதிப்பாக இருக்கும் என்பதை சொல்ல முடியும்" என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.தென்காசி மாவட்டம், கலிங்கப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி வாக்குச்சாவடியில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, முதன்மை செயலாளர் துரை வைகோ மற்றும் வைகோவின் துணைவியார் வேணுகாதேவி ஆகியோர் வாக்களித்தனர்.பின்னர் செய்தியாளர்களிடம்



வைகோ கூறியது: "இந்த தேர்தலின் முடிவுகள் எவ்விதம் அமையும் என தொடர்ந்து விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.


இந்த தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் அந்தந்த தொகுதிகளில் பெரும்பான்மையான வாக்குகளை பெற்று மகத்தான வெற்றியை பெறுவார்கள். திமுக தனது சொந்த பலத்தில் ஆட்சி அமைக்கும் என்று பிரச்சாரத்தில் சொல்லி வந்தேன். அதே கருத்தில் உறுதியாக இருக்கிறேன்.

கூட்டணி அமைச்சரவை என்ற கேள்விக்கே இடமில்லாமல் போகும். திமுக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் 190 முதல் 200 தொகுதிகளில் வெற்றி பெறுவார்கள் என்று நம்புகிறேன். வாக்கு எண்ணி முடித்த பிறகுதான் தவெக வாங்கும் வாக்குகள் யாருக்கு பாதிப்பாக இருக்கும் என்பதை சொல்ல முடியும்" என்றார்.

# விளாத்திகுளம் தொகுதியில் 4 கிராமங்களில் தேர்தல் புறக்கணிப்பு: காரணம் என்ன?

கோவில்பட்டி, ஏப்.24-

விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட எட்டயபுரம் அருகே குளத்துள்வாய்பட்டியில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமை இடமாற்றம் செய்ய வலியுறுத்தி 4 கிராம மக்கள், வீடுகளில் கருப்புக் கொடி கட்டி தேர்தலை புறக்கணித்துள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தொகுதிக்கு உட்பட்ட எட்டயபுரம் அருகே சுரைக்காய்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட குளத்துள்வாய்பட்டி கிராமத்தில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் 45 வீடுகள் அமைந்துள்ளன. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ளவர்களுக்கு அரசு சார்பில் புதிதாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அதன் பின்னர் குளத்துள்வாய்பட்டி கிராம மக்கள் தங்களது விவசாய நிலங்களுக்கு செல்வதில் பிரச்சினை உருவாகியது. அவர்களுக்கும் முகாமில் உள்ளவர்களுக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது.

இதையடுத்து கடந்த 2 ஆண்டுகளாக இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ளவர்களை கண்காணிக்க வேண்டும். இப்பகுதியில் போதை பொருள் நடமாட்டம் அதிகமாக உள்ளதால், குளத்துள்வாய்பட்டியில் புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டும். புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதால், அவர்கள் தங்கியிருந்த கோழிப்பண்ணை ஷெட்டை தங்களுக்கு விவசாய விளை பொருட்கள் காய வைக்கும் களமாக பயன்படுத்த வழங்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆனால், வட்டாட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள் தரப்பில் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும் எந்தவொரு தீர்வும் எட்டப்படாமல் அப்படியே உள்ளது. இந்நிலையில் கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 6ம் தேதி குளத்துள்வாய்பட்டி கிராம மக்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து தங்களது வீடுகள் மற்றும் தெருக்களில் கருப்புக் கொடிகளை ஏற்றி, சட்டமன்ற தேர்தலை புறக்கணிப்பதாகவும் தெரிவித்தனர்.தொடர்ந்து கடந்த 17ம் தேதி கிராம மக்கள் சார்பில் விவசாய நிலங்களுக்கு செல்லும் பாதையில் சரல் மண் கொட்டி சமன் செய்தனர். இதற்கு முகாம் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். மறுநாள் 18ம் தேதி கிராம மக்களுக்கும் முகாமை சேர்ந்தவருக்கும் இடையே பிரச்சினை உருவானது. போலீஸார் மற்றும் வருவாய்த் துறையினர் குளத்துள்வாய்ப்பட்டி கிராமத்துக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமை உடனடியாக இங்கிருந்து இடமாற்றம் செய்ய வேண்டி கிராம மக்கள் உறுதியாக இருந்தனர். இதனால் பேச்சுவார்த்தை எந்தவித முடிவும் எட்டப்படாமல் போனது.தொடர்ந்து கிராம மக்கள் இலங்கை தமிழர் முகாமை இடமாற்றம் செய்தால் மட்டுமே தேர்தலில் வாக்களிப்போம் இல்லையென்றால் தேர்தலை புறக்கணிப்போம் என அறிவித்தனர். அதன்படி இன்று காலை ஏழு மணிக்கு சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கியது. குளத்துள்வாய்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் வாக்குச்சாவடி அலுவலர்கள் தயாராக இருந்தனர். இந்த வாக்குச்சாவடியில் 453 ஆண்கள், 530 பெண்கள் என மொத்தம் 983 வாக்காளர்கள் உள்ளனர். இதில் காலை 9 மணி நிலவரப்படி 5 பேர் மட்டுமே வாக்களித்தனர். 11 மணி நிலவரப்படி 8 பேர் வாக்களித்துள்ளனர்.

இந்த வாக்குச்சாவடிக்கு உட்பட்ட குளத்தூள்வாய் பட்டி, குமார கிரி, சோத்து நாயக்கன்பட்டி, அம்மா மடம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிக்க வாக்குச்சாவடிக்கு செல்லாமல் வீடுகளில் கருப்பு கொடி கட்டி தங்கள் வீட்டு வாசலிலேயே அமர்ந்திருந்தனர். வாக்காளர்கள் இல்லாமல் வாக்குச்சாவடி வெறிச்சோடி காணப்பட்டது. வருவாய்த்துறை மற்றும் காவல்துறையின் அலட்சியம் காரணமாகவே குளத்துள்வாய்ப்பட்டி கிராமத்தில் பிரச்சினை பெரிதாகிவிட்டது. இதற்கு ஒரே தீர்வு இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமை இங்கிருந்து வேறு இடத்துக்கு மாற்றம் செய்வது மட்டுமே, என கிராம மக்கள் தெரிவித்தனர்.

# ஈரானில் தவித்த 650 மீனவர்கள் பத்திரமாக மீட்பு: உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்



மதுரை, ஏப்.24- போர் காரணமாக ஈரானில் இருந்து வெளியேற முடியாமல் தவித்து வந்த 650 இந்திய மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டு, சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.நாம் தமிழர் கட்சி மீனவர் பாசறை ஒருங்கிணைப்பாளர் தீரன் திருமுருகன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: திருப்பாலைக்குடியைச் சேர்ந்த எனது உறவினர் முகேஷ் (26) உட்பட பல மீனவர்கள் மீன்பிடி தொழிலுக்காக சில மாதங்களுக்கு முன்பு ஈரான் சென்றனர்.

ஈரானில் தற்போது போர் நடந்து வருவதால் அங்குள்ள மீனவர்கள் இஜ்ரோ துறைமுகத்தை விட்டு வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர். சொந்த ஊர்களுக்கு திரும்புவதற்கு எந்த வழியும் இல்லாமல் சிறை வைக்கப்பட்ட சூழலில் உள்ளனர்.போர் பதற்றம் காரணமாக மீனவர்களுக்கு உணவு, குடிநீர், மருத்துவ வசதிகளும் கிடைக்கவில்லை. சுற்றிலும் பீரங்கி தாக்குதல், வான்வழி தாக்குதல்கள் நடந்து வருவதால் உயிர் பயத்தில் உள்ளனர்.ஈரானில் கடலோரப் பகுதிகளும், துறைமுகப் பகுதிகளும் போர் காரணமாக பாதுகாப்பற்ற இடங்களாக மாறிவிட்டன. ஈரான் நாட்டில் 700க்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் இருப்பதாக தகவல் வந்துள்ளது.எனவே மீனவர்களை பத்திரமாக மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு நீதிபதிகள் ஆனந்த்வெங்கடேஷ், ராமகிருஷ்ணன் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

மத்திய அரசு தரப்பில் ஈரானில் இருந்து 650 இந்திய மீனவர்கள் ஏப். 4ம் தேதி பத்திரமாக மீட்கப்பட்டு சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 283 பேர் தமிழக மீனவர்கள் எனக் கூறப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், போர்ச் சூழலில் ஈரானில் தவித்த இந்திய மீனவர்களை பத்திரமாக மீட்டு தாயகம் அழைத்து வந்ததற்காக மத்திய அரசுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த மாநில அரசுக்கும் நீதி மன்றம் பாராட்டு தெரிவிக்கிறது. மனு முடிக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# தேர்தல் ஆணைய நெறிமுறை அறிந்து விஜய் கோரிக்கை வைத்திருக்கலாம்: அமைச்சர் கோவி.செழியன்



சென்னை, ஏப்.24- தேர்தல் ஆணையத்தின் நெறிமுறையை அறிந்து நடிகர் விஜய் கோரிக்கை வைத்தால் நியாயமாக இருக்கும் என உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

திருவிடைமருதூர் வட்டம் திட்டச்சேரி அரசு தொடக்கப்பள்ளியில் பார்வையிட்ட உயர்கல்வித் துறை அமைச்சரும், திருவிடைமருதூர் தொகுதி திமுக வேட்பாளருமான கோவி.செழியன் செய்தியாளர்களிடம் பேசுகையில், "திருவிடைமருதூர் தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் சென்று வாக்காளர்கள் வாக்களிக்கக் கூடிய விகிதாசாரத்தை பார்வையிட்டு வருகிறேன்.

5 ஆண்டு காலம் திமுக செய்த பணிகள், திமுகவின் தேர்தல் அறிக்கை கிராமப்புறங்களில் பிரதிபலிப்பதை பார்த்து வருகிறோம் அனைத்து தரப்பு மக்களும் திமுக தொடர வேண்டும் என கருதுகிறார்கள். திமுக வெற்றி, வாக்குப்பதிவின்போதே உறுதி செய்யப்பட்டு விட்டது. திருவிடைமருதூர் தொகுதியில் முழு நிறைவாக வாக்குப்பதிவு நடப்பதற்கு திமுக கூட்டணி களப்பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம்" என்றார்.பின்னர், "தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் வாக்குப்பதிவிற்கு 2 மணி நேரம் கூடுதலாக ஒதுக்கி தர வேண்டும் என அறிக்கை வெளியிட்டுள்ளார்" என அவரிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு, தேர்தல் விதிமுறைகளை நன்றாக புரிந்தவர்கள், அறிந்தவர்கள் அதற்கு கட்டுப்பட்டு தான் நடக்க வேண்டும். காலையில் நினைத்து, மதியம் சொல்லி மாலையில் மாற்றுவது தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளில் இல்லை. அரசியல் விபரம் புரிந்தவர்கள், தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை புரிந்தவர்கள், கடந்த கால தேர்தல் நெறிமுறைகளை தெரிந்தவர்கள், இப்படிச் சொல்வதற்கு வாய்ப்பில்லை.மாலை 6 மணிக்கு மேல் வாக்களிப்பவர்களுக்கு டோக்கன் வழங்கி தேர்தல் ஆணையம் வாக்களிப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் உரிய நெறிமுறையை நன்றாக பார்த்து, அறிந்து புரிந்து நடிகர் விஜய் அந்தக் கோரிக்கையை வைத்தால் நியாயமாக இருக்கும் என்றார் அவர்.

# "யார் ஆட்சிக்கு வந்தாலும்..." வாக்களித்த பின் நடிகர் சிவக்குமார் வைத்த கோரிக்கை




சென்னை, ஏப்.24- தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனது வாக்கினை செலுத்திய பின் நடிகர் சிவக்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது யார் ஆட்சிக்கு வந்தாலும் இதை செய்ய வேண்டுமென அவர் கோரிக்கை ஒன்றை வைத்தார்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று காலை 7 மணிக்கு தொடங்கியது. இதில் மொத்தம் 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். காலை 9 மணி நிலவரப்படி சுமார் 17.69 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. இந்த சூழலில் சினிமா, அரசியல் என பல்வேறு துறை சார்ந்த பிரபலங்கள் தங்களது ஜனநாயக கடமையை ஆற்றி வருகின்றனர். அந்த வகையில் நடிகர் சிவக்குமார் சென்னையில் தனது வாக்கினை செலுத்தினார்."என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் டாஸ்மாக் மதுபானக் கடைகளை உடனடியாக மூட வேண்டும். குடிமக்களை குடிகார மக்களாக ஆக்கியது போதும்.கோடி கோடியாக சொத்துகளை குவிக்காமல் கடைக்கோடி மக்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும். நான் வைக்கும் இந்த கருத்தை பல ஆண்டுகளாக சொல்லி வருகிறேன். இதை செய்வார்களா என்று தெரியாது. ஆனால், செய்தால் சந்தோஷம். கிட்டத்தட்ட 40 சதவீத மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்" என சிவக்குமார் தெரிவித்தார்.




# "தமிழகத்தின் மிக முக்கிய தேர்தல்; வாக்கு செலுத்துவீர்..." கிரிக்கெட் வீரர் அஸ்வின்

சென்னை, ஏப்.24- தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சென்னை மேற்கு மாம்பலத்தில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினை செலுத்தினார் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அஸ்வின்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று காலை 7 மணிக்கு தொடங்கியது. இதில் மொத்தம் 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். காலை 11 மணி நிலவரப்படி சுமார் 37.56 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. இந்தச் சூழலில் சினிமா, அரசியல், விளையாட்டு என பல்வேறு துறை சார்ந்த பிரபலங்கள் தங்களது ஜனநாயக கடமையை ஆற்றி வருகின்றனர். அந்த வகையில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அஸ்வின், தனது மனைவி ப்ரீத்தி உடன் வந்து வாக்கு செலுத்தினார்."இந்த தேர்தல் தமிழகத்தின் மிக முக்கிய தேர்தல். நான் எனது உரிமையை செலுத்தியுள்ளேன். இதன் மூலம் எனது கடமையை செய்துள்ளேன். இப்போது மற்ற வாக்காளர்களும் இதைச் செய்ய வேண்டும். ஆட்சிக்கு வருபவர்களால் தமிழகம் மாற்றம் காணும் என நம்புகிறேன்" என அஸ்வின் தெரிவித்தார்.

# இந்தியா சீனா இடையே நேரடி விமான போக்குவரத்து மீண்டும் தொடக்கம்




புதுடெல்லி, ஏப்.24- இந்தியா சீனா இடையிலான நேரடி விமான போக்குவரத்து சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக, ஏர் சீனா நிறுவனம், பெய்ஜிங் டெல்லி இடையிலான தனது விமான சேவையை செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

கடந்த 2020ம் ஆண்டு நிலவிய கல்வான் பள்ளத்தாக்கு மோதல் மற்றும் கரோனா பரவல் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவை நிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது படிப்படியாக விமான சேவை இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறது.இதுகுறித்து சீனாவின் 'குளோபல் டைம்ஸ்' இதழ் வெளியிட்டுள்ள செய்தி: பெய்ஜிங் மற்றும் டெல்லி இடையிலான நேரடி விமான சேவையை செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமை என வாரத்திற்கு 3 நாட்களில் ஏர் சீனா வழங்க உள்ளது. இதற்காக ஏர்பஸ் 330 ரக விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பெய்ஜிங்கில் இருந்து மதியம் 3:15 மணிக்கு புறப்படும் ஏர் சீனா விமானம், இந்திய நேரப்படி இரவு 8:20 மணிக்கு டெல்லியை வந்தடையும். இதன் ஆரம்ப பக்கட்ட பயணக் கட்டணம் சுமார் 3,570 யுவான் அதாவது சுமார் ரூ.49,000 ஆக (சுமார் 523 அமெரிக்க டாலர்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.ஏர் சீனா நிறுவனத்தைத் தொடர்ந்து, பிற விமான நிறுவனங்களும் தங்களது சேவையை விரிவுபடுத்தி வருகின்றன. சீனா ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் கடந்த ஏப்ரல் 18ம் தேதி முதல் குன்மிங் கொல்கத்தா இடையிலான சேவையைத் தொடங்கியது. முன்னதாக, 2025 நவம்பரில் ஷாங்காய் டெல்லி சேவையை இந்நிறுவனம் மீண்டும் தொடங்கியது. இந்திய நிறுவனமான இண்டிகோ, மார்ச் 30ம் தேதி முதல் கொல்கத்தா ஷாங்காய் தினசரி நேரடி விமான சேவையைத் தொடங்கியுள்ளதாக குளோபல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான விமான சேவையில் ஏற்பட்டுள்ள இந்த முன்னேற்றம் குறித்து சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ கூறுகையில், "இந்திய சீன உறவு சரியான பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது. வேறுபாடுகளைக் கட்டிலும் இரு நாடுகளுக்கும் இடையே பொதுவான நலன்களே அதிகம்.உலகளாவிய சூழலில் சவால்கள் நிறைந்திருக்கும் நிலையில், இந்தியாவும் சீனாவும் ஒருவரை ஒருவர் அச்சுறுத்தலாகப் பார்க்காமல், வளர்ச்சிக்கான வாய்ப்புகளாகக் கருதிச் செயல்பட வேண்டும். இரு நாட்டுத் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி, கூட்டாளிகளாகப் பயணிக்கச் சீனா தயாராக உள்ளது" என்றார்.



■ மொடக்குறிச்சி தொகுதி பாஜக வேட்பாளர் கிருத்திகா சிவகுமார் மற்றும் அவரது மாமியாரும் தற்போதைய மொடக்குறிச்சி தொகுதி எம்எல்ஏவுமான டாக்டர் சி.சரஸ்வதி ஆகியோர் ஈரோடு கிழக்கு தொகுதி சிஎஸ்ஐ பள்ளியில் தங்களது வாக்கினை செலுத்தினார்கள்...



■ மொடக்குறிச்சி தொகுதி மதிமுக வேட்பாளர் செந்தில்நாதன் தனது மனைவியுடன் வந்து ஈரோடு கிழக்கு தொகுதி வாக்கு சாவடியில் வாக்கு செலுத்தினார்...

# வாக்குப்பதிவு மையத்துக்கு வந்த காட்டு யானை! மேற்கு வங்க தேர்தல் சுவாரஸ்யம்



கொல்கத்தா, ஏப்.24- மேற்கு வங்கத்தின் ஜார்கிராமில் அமைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு மையத்துக்கு காட்டு யானை ஒன்று காலையிலேயே வந்ததால் அதிகாரிகளும் வாக்காளர்களும் அச்சமடைந்தனர்.

தேர்தலின்போது செல்வாக்குமிக்கவர்கள் வாக்குப்பதிவு மையங்களில் தம் பலத்தைக் காட்ட முயல்வது மேற்கு வங்க அரசியலில் சாதாரணமானதுதான் என்ற போதிலும், இது ஒரு வித்தியாசமான பலப் பிரயோகமாக இருந்தது. வாக்காளர்கள் வாக்களிக்க ஜிதுஷோல் தொடக்கப் பள்ளிக்கு வரத் தொடங்கிய நிலையில், திடீரென ராம்லால் என்ற காட்டு யானை பள்ளிக்குள் நுழைந்தது. மெதுவாக நடந்து சுற்றி வந்த அந்த யானையைப் பார்த்து வாக்குப் பதிவு மையத்தில் இருந்த அதிகாரிகளும் வாக்காளர்களும் அச்சமடைந்தனர். வாக்காளர்கள் நின்று கொண்டிருந்த வரிசையைக் கடந்து சென்ற அந்த யானை, அங்கிருந்த வாகனங்களை நோட்டமிட்டுக்கொண்டிருந்தது. இதனால், தேர்தல் பணிகள் சற்று தாமதமாகின. எனினும், லோதாஷூலி சரகத்தில் இருந்து விரைந்து வந்த வனத்துறை அதிகாரிகள், அந்த யானையை மெதுவாக பாதுகாப்பான தூரத்துக்கு அழைத்துச் சென்றனர். இதையடுத்து, வாக்குப்பதிவு மையம் விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்பியது.

காடுகளை ஒட்டிய பகுதி என்பதால், வனத்துறைக்கு முன் கூட்டியே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன் அடிப்படையில், வனத்துறை அதிகாரிகளும் காலை முதலே தயார் நிலையில் இருந்ததால், யானை விரைவாக அப்புறப்படுத்தப்பட்டது. ராம்லால் என்ற பெயர் கொண்ட இந்த யானை அடிக்கடி இப்பகுதிக்குள் வரும் என்றும் கிராம மக்கள் உணவுகளை வழங்கி மகிழ்வார்கள் என்றும் கூறப்படுகிறது.

மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 294 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இன்று 152 தொகுதிகளுக்கு முதல் கட்டத் தேர்தல் நடைபெற்று வருகிறது. காலை 11 மணி நிலவரப்படி 41.11% சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன.

# மேற்கு வங்கத்தில் வன்முறை: இரு தரப்பினர் கட்டையால் தாக்கிக் கொண்டதால் முர்ஷிதாபாத்தில் பதற்றம்



கொல்கத்தா, ஏப்.24- மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்று வரும் நிலையில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியினருக்கும், ஆம் ஜனதா உன்னாயன் கட்சியினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியினருக்கும் அந்த மாவட்டத்தில் அதிக செல்வாக்குள்ள ஹுமாயூன் கபீரின் ஆம் ஜனதா உன்னாயன் கட்சியினருக்கும் இடையே இன்று காலை மோதல் ஏற்பட்டது.இரு தரப்பும் கட்டைகளைக் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். மேலும், அங்கிருந்த காரையும் அவர்கள் தாக்கினர். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்த மோதலில் பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். சம்பவம் குறித்த தகவல் அறிந்து பாதுகாப்புப் படையினர் விரைந்தத்தை அடுத்து அங்கு அமைதி ஏற்பட்டது.

முன்னதாக, முர்ஷிதாபாத்தில் நேற்று பெட்ரோல் வெடிகுண்டு வீசப்பட்டதில் ஒரு பெண் பாதிக்கப்பட்டார். ஹுமாயூன் கபீரின் கட்சியினரே தாக்குதலுக்குக் காரணம் என்று பாதிக்கப்பட்ட பெண் கூறி இருந்தார். இந்நிலையில் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட ஹுமாயூன் கபீர் அங்கு வந்தார். அப்போது, திரிணமூல் காங்கிரஸ் கட்சியினர் திரண்டு வந்து அவருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். மேலும், அவர் சம்பவ இடத்துக்குச் செல்ல விடாமல் தடுத்தனர். ஹுமாயூன் கபீரை போலீசார் மிகுந்த பாதுகாப்போடு அங்கிருந்து அழைத்துச் சென்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஹுமாயூன் கபீர், "தேர்தல் அமைதியான முறையில் நடைபெற வேண்டும். அது அமைதியாக நடந்தால் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால், இந்த வாக்குச்சாவடிகளில் திரிணமூல் காங்கிரஸ் தொண்டர்கள் காவல்துறையினருடன் இணைந்து இரவு முழுவதும் குழப்பத்தை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது. அவர்கள் பணத்தைக் கொடுத்து அதிகாரிகளுடன் கைகோர்த்து தேர்தல் நடைமுறைகளை தங்களுக்குச் சாதகமாக மாற்றி வருகின்றனர். வாக்குச்சாவடிகளுக்குள் நிலைமை சீராக இருக்கலாம். ஆனால் வெளியே மக்கள் அச்சுறுத்தப் படுகிறார்கள். இரவு முழுவதும் மிரட்டப்பட்டார்கள். தேர்தல் ஆணையம் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டம் ஒழுங்கு மாநிலக் காவல்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளபோதும், மத்திய படைகள் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள போதும் இத்தகைய நடவடிக்கைகள் அரசியல் செல்வாக்கால் நடக்கின்றன. தேர்தல் நடவடிக்கைகள் சமரசம் செய்யப்படுகின்றன. சாமானிய மக்களால் என்ன செய்ய முடியும்?" எனக் கூறினார்.முர்ஷிதாபாத்தின் டோம்கல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நஜர்புரில் உள்ள வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்ல விடாமல் தடுக்கப்பட்டதாக புகார் எழுந்துள்ளது. முர்ஷிதாபாத் வன்முறை குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அசன்சோல் தக்ஷின் தொகுதி பாஜக வேட்பாளர் அக்னிமித்ரா, "இதை நான் காலையிலேயே சொன்னேன். மம்தா பானர்ஜி அரசு இதுபோன்ற செயல்களைச் செய்யும், குண்டுகளை வீசும், மின்வெட்டை ஏற்படுத்தும். அவர்கள் கேமராக்களை சேதப்படுத்த முயல்வார்கள்.இதுதான் திரிணமூல் காங்கிரஸின் செயல்முறை. இதுபோன்ற செயல்களைச் செய்வதன் மூலம் வாக்காளர்களை வாக்களிக்க வரவிடாமல் தடுத்து விடலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். தேர்தல் ஆணையம் இதுபோன்ற சம்பவங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்" என்று வலியுறுத்தினார்.மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 294 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இன்று 152 தொகுதிகளுக்கு முதல் கட்டத் தேர்தல் நடைபெற்று வருகிறது. காலை 11 மணி நிலவரப்படி 41.11% சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன.



■ மொடக்குறிச்சியில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆண்கள் மற்றும் பெண்கள் நீண்டவரிசையில் காத்திருந்து தங்கள் ஜனநாயக கடமையை ஆற்றினார்கள்



■ ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அரசு தொடக்கப் பள்ளியில் ஆண்கள் ஆண்கள் ஆண் மற்றும் பெண் வாக்காளர்கள் வரிசையில் நின்று தங்களது ஜனநாயக கடமையாற்றினார்கள்

## "எனக்கு எல்லா கட்சியிலும் ரசிகர்கள் உள்ளதால்..." வாக்களித்த பின் நடிகர் சிம்பு கருத்து

சென்னை, ஏப்.24-

"தேர்தலில் மாற்றம் வரவேண்டுமா, இல்லையா என்பதை நான் முடிவு செய்ய முடியாது. மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. நான் ஒரு நடிகனாக இருக்கிறேன். எனக்கு எல்லா கட்சியிலும் ரசிகர்கள் உள்ளனர். எனவே, ஒரு சார்பாக எந்த கருத்தையும் சொல்ல முடியாது" என நடிகர் சிலம்பரசன் தெரிவித்தார்.



சென்னை தி.நகரில் நடிகர் சிலம்பரசன் இன்று வாக்களித்தார். இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், " அனைவரும் வாக்களிக்கும்படி நேற்று ட்வீட் போடலாம் என்று இருந்தேன். ஆனால், இந்த தேர்தல் ஒரு வித்தியாசமானதாக இருப்பதால், அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளனர். அதனையே நல்ல மாற்றமாக நான் பார்க்கிறேன். தேர்தலில் மாற்றம் வரவேண்டுமா, இல்லையா என்பதை நான் முடிவு செய்ய முடியாது. மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு.நான் ஒரு நடிகனாக இருக்கிறேன். எனக்கு எல்லா கட்சியிலும் ரசிகர்கள் உள்ளனர். எனவே ஒரு சார்பாக எந்த கருத்தையும் சொல்ல முடியாது. அவரவருக்கு பிடித்தவருக்கு ஓட்டு போட போகிறார்கள்.இந்த தேர்தலில் ஓட்டு போட்டே ஆகவேண்டும் என அபரிமிதமான ஆர்வம் தெரிகிறது. மே 4ஆம் தேதி பார்ப்போம். இந்த முறை இளைஞர்கள் அதிகம் வாக்களிப்பது நல்ல விஷயம்தான். என் அப்பா டி.ஆர் சொன்னது அவரது கருத்து. நான் வேறு, அவர் வேறு. மக்கள் தெளிவாக உள்ளார்கள். அவர்கள் சரியானவர்களையே தேர்ந்தெடுப்பார்கள் என நம்புகிறேன்" என்றார்.

## செர்னோபில் அருகே ரஷ்ய ஏவுகணைகள்: அணு உலை பேரழிவு எச்சரிக்கை விடுத்தது உக்ரைன்

கீவ், ஏப்.24-

செர்னோபில் அணு உலை விபத்தின் 40வது ஆண்டு நினைவு தினம் வரும் ஞாயிற்றுக்கிழமை அனுசரிக்கப்பட உள்ளது.



இந்நிலையில், செய்தி நிறுவனத்திடம் உக்ரைனின் தலைமை அரசு வழக்கறிஞர் ருஸ்லான் கிராவ்செனகோ கூறியுள்ளதாவது: கடந்த 2024 ஜூலை முதல் உக்ரைன் மீது ரஷ்யா தீவிர ட்ரோன் தாக்குதல்களை நடத்தி வருகிறது. குறிப்பாக, செர்னோபில் அணு உலையின் கதிர்வீச்சு பாதுகாப்பு கவசத்துக்கு 5 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் குறைந்தது 92 ரஷ்ய ட்ரோன்கள் பறந்ததை எங்களது ரேடார்கள் கண்டறிந்துள்ளன.உக்ரைனை அச்சுறுத்தவும், தீவிரவாதத்தை பரப்பவுமே அணு உலைகளுக்கு மேல் ரஷ்யா இதுபோன்று ஏவுகணைகளையும், ட்ரோன்களையும் ஏவி வருகிறது. கடந்த 1986ம் ஆண்டு ஏப்ரல் 26ம் தேதி வெடித்துச் சிதறிய செர்னோபிலின் 4வது அணு உலையிலிருந்து கதிர்வீச்சு கசியாமல் தடுப்பதற்காக பிரம்மாண்ட பாதுகாப்பு கவசம் அமைக்கப்பட்டுள்ளது.கடந்த 2025 பிப்ரவரியில் ட்ரோன் தாக்கியதில் இந்த கவசத்தின் உள் மற்றும் வெளி அடுக்குகளில் 6 மீட்டர் விட்டம் கொண்ட ஓட்டை ஒன்று விழுந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே, இது மீண்டும் ஒரு அணு உலை பேரழிவுக்கு வழி வகுக்கும். இவ்வாறு கிராவ்சென்கோ கூறியுள்ளார். இதுகுறித்து செர்னோபில் நிலைய இயக்குநர் செர்ஜி தாரகனோவ் கூறுகையில், "இந்தக் கட்டமைப்பின் அருகே ஏவுகணை விழுந்தால் அது ஒரு சிறிய நிலநடுக்கத்தையே ஏற்படுத்தும். இந்தப் பாதுகாப்பு கவசம் நிலைத்து நிற்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை" என எச்சரித்துள்ளார்.



மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், சோழவந்தான் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அரசு திருவேடகம் அரசு ஆரம்பப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் நடைபெற்று வரும் வாக்குப்பதிவை பார்வையிட்டு, மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகளை ஆய்வு செய்தார்.



■ மதுரை மேற்கு தொகுதியில் உள்ள ஜெயந்திபுரம் பாரதியார் தெருவில்உள்ள கிரேஸ் ஸ்கூல்வாக்குச்சாவடியை பூத் நேரில் , அதிமுக வேட்பாளர்செல்லூர் ராஜுபார்வையிட்டார்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026ஐ முன்னிட்டு வாக்குப்பதிவு நாளான (23.04.2026) தென்காசி சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட மஞ்சம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., வாக்குப்பதிவு செலுத்தி வாக்குச்சாவடி மையங்களை ஆய்வு மேற்கொண்டார்.

## "கிளாம்பாக்கத்தில் பேருந்துகள் இன்றி தவித்த 5,000 பேர்." தோல்வி பயமே காரணம் என சசிகலா சாடல்

சென்னை, ஏப்.24-

"கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் 5,000க்கும் அதிகமான பொது மக்கள் அரசு பேருந்துகள் இல்லாமல் வாக்களிக்க சொந்த ஊருக்கு செல்ல முடியாமல் தவித்துள்ளனர். திமுகவினருக்கு ஏற்பட்ட தோல்வி பயத்தினால் மக்கள் வெளியூர் செல்வது தடுக்கப்படுகிறதா என்று எண்ணத் தோன்றுகிறது" என அகில இந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் சசிகலா தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து வெளியூர்களுக்கு செல்லும் பேருந்துகள் நேற்று இரவு முதல் இயக்கப்படாததால், தங்களது ஜனநாயக கடமையை ஆற்றுவதற்காக சென்னையிலிருந்து வெளியூர் செல்லும் பயணிகள் மிகவும் அவதியடைந்துள்ளனர். கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் 5,000க்கும் அதிகமான பொதுமக்கள் அரசு பேருந்துகள் இல்லாமல் வாக்களிக்க சொந்த ஊருக்கு செல்ல முடியாமல் தவித்து உள்ளனர். பயணிகள் குடிதண்ணீர் கூட கிடைக்காமல் பரிதவித்துள்ளனர்.

அதேபோன்று திண்டுக்கல் பேருந்து நிலையத்திலிருந்து வாக்களிக்கச் செல்ல பேருந்துகள் இல்லாமல் பயணிகள் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். தமிழகம் முழுவதும் பல இடங்களில் பேருந்து வசதி இல்லாமல் இதே அவல நிலைதான் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.தேர்தல் நடைபெறும் நாளில் அரசு பேருந்துகளை கூடுதலாக இயக்குவதற்கு ஏன் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கவில்லை. திமுகவினருக்கு ஏற்பட்ட தோல்வி பயத்தினால் மக்கள் வெளியூர் செல்வது தடுக்கப்படுகிறதா என்று எண்ணத் தோன்றுகிறது.

ஒவ்வொரு மனிதனும் வாக்களிப்பது அவர்களது ஜனநாயக உரிமை. அதை தடுக்கும் விதத்தில் செயல்படுகின்ற திமுக தலைமையிலான அரசுக்கு எனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். திமுகவினர் தமிழகத்தில் வாக்குப்பதிவு அதிகரிப்பதை தடுப்பதற்கு ஏதாவது தில்லுமுல்லுகளை அரங்கேற்றிக்கொண்டுதான் இருப்பார்கள். தமிழக வாக்காளர்கள்தான் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

## மேற்கு வங்கத்தில் முதல் கட்டத் தேர்தல் 152 தொகுதிகளில் தொடங்கியது வாக்குப் பதிவு

கொல்கத்தா, ஏப்.24-

மேற்கு வங்கத்தில் 152 தொகுதிகளில் இன்று முதல் கட்டமாக வாக்குப் பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது. மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்து வருகின்றனர்.மேற்கு வங்கத்தில் மொத்தம் 294 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இந்த தொகுதிகளுக்கு ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக தேர்தல் நடக்கிறது. முதல் கட்டத்தில் 152 தொகுதிகளுக்கு இன்று (ஏப்ரல் 23) வாக்குப் பதிவு நடைபெற்று வருகிறது.இந்த தொகுதிகளில் நேற்று முன்தினம் மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைந்தது. முதல் கட்டத் தேர்தலில் மொத்தம் 1,478 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 3.60 கோடி பேர் வாக்குரிமை பெற்று உள்ளனர்.தேர்தல் பிரச்சாரத்தின்போது ஆளும் திரிணமூல் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் பாஜக தொண்டர்களுக்கும் இடையே பல்வேறு இடங்களில் மோதல்கள் நடைபெற்றன. இதை கருத்தில் கொண்டு முதல்கட்ட தேர்தல் நடைபெறும் இடங்களில் மத்திய பாதுகாப்புப் படைகளை சேர்ந்த 2.5 லட்சம் வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகள் மிகவும் பதற்றமானவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன.



பாஜக மூத்த தலைவர் சுவேந்து அதிகாரி போட்டியிடும் நந்தி கிராம் தொகுதியில் இன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அந்த தொகுதியில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. முதல் கட்ட தேர்தல் நடைபெறும் 152 தொகுதிகளிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், பதற்றம் நிறைந்த வாக்குச் சாவடிகளில் துணை ராணுவப் படையினர் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சியும், பாரதிய ஜனதா தலைமையிலான என்டிஏ கூட்டணியும், காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகள் கூட்டணி என 4 முனைப்போட்டி நிலவுகிறது.



■ காயல் பட்டிணம் சென்ரல் ஸ்கூல் வாக்கு சாவடியில் மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி மாநில தலைவர் காயல் அப்பாஸ் மற்றும் அவரது மகன் முகமது அலி ஆகிய இருவரும் ஜனநாயக கடமையை நிறைவேற்றினர்.




■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.,மதுரை மாவட்டம், ஆயுதப்படை பயிற்சி மைதானத்தில் உள்ள மாநகராட்சி துவக்கப் பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொது தேர்தல் 2026 முன்னிட்டு வாக்குப்பதிவு நாளான தேனி மாவட்டம் 199 பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வட புதுப்பட்டி முத்தாலம்மன் இந்து மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங் வாக்குப்பதிவு செய்தார்



■ உடுமலை சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் தாராபுரம் ரோடு உடுமலை நகராட்சி துவக்கப்பள்ளி பூத் எண் 256ல் தனது வாக்கினை பதிவு செய்தார் .உடன் நகர செயலாளர் ஹக்கீம், பாண்டியன் ஆகியோர் உடன் இருந்தனர்










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000